161

# TAMILNADU POLLUTION CONTROL BOARD

**Tamil Nadu Pollution Control Board**
**76, Mount Salai, Guindy, Chennai-600 032**

## Public Notice

### Compliance of Environmental norms by Marriage Halls / Restaurants / Hotels / Motels / Banquets etc.

In pursuance of the orders of the Hon'ble National Green Tribunal (Principal Bench), in O.A. No. 400/2017 dated 23.07.2020, the Tamil Nadu Pollution Control Board issues this Public Notice.

In the matter of Compliance of Environmental norms by Restaurants/Hotels/ Motels/ Banquets etc, the Hon'ble National Green Tribunal (Principal Bench) in the order dated 23.07.2020 in O.A. No. 400/2017, directed that all the States to take further steps in the matter of adopting and enforcing the CPCB guidelines to ensure sustainable use of water, solid and liquid waste management and compliance with the statutory environmental norms under the Water Act, 1974, the Air Act, 1981, the Environment (Protection) Act, 1986 including the Noise Pollution (R&C) Rules, 2000, providing for adequate parking facilities and having adequate stack heights for the DG Sets by the Restaurants/Hotels/ Motels/ Banquets etc in the State. Compliance of such norms must be overseen by the statutory regulatory authorities, including the Local Bodies, the State Pollution Control Boards and, wherever there is violation, stringent action must be taken by way of stopping the non-compliant activities, initiating prosecution and recovering compensation on "Polluter Pays" principle. This is necessary to enforce the right of citizens to clean environment, which is part of right to life. The Hon'ble NGT also directed that all the concerned authorities in all the States and the State PCBs take further action and give their quarterly report to the CPCB.

In view of the above, all the Marriage Halls, Restaurants, Hotels, Motels, and Banquets etc., in the State of Tamil Nadu shall comply with the '*Mechanisms / Guidelines for Control of Pollution and Enforcement of Environmental Norms at Individual Establishments and the Area/ Cluster of Restaurants/ Hotels/ Motels/ Banquets etc.*' issued by the Central Pollution Control Board. Accordingly the Marriage Halls, Restaurants/Hotels/ Motels/ Banquets etc., in the State of Tamil Nadu shall get consent to establish / consent to operate under the Water (P&CP) Act, 1974 and the Air (P&CP) Act, 1981 from the Tamil Nadu Pollution Control Board. Failure to get consent will lead to stopping the non-compliant activities, initiating prosecution and recovering compensation on "*Polluter Pays*" principle. For further details visit www.tnpcb.gov.in or contact the concerned District Environmental Engineer, TNPCB.

5/5
**Chairman**
**Tamil Nadu Pollution Control Board**

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22343140, 22353141
Fax : 044 - 22353068
Email : tnpcb@md3.vsnl.net.in Web : www.tnpcb.gov.in

# TAMILNADU POLLUTION CONTROL BOARD

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
76, மவுண்ட் சாலை, கிண்டி, சென்னை—600 032.

## பொது அறிவிப்பு

**திருமண மண்டபங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள், நெடுஞ்சாலை உணவகங்கள் மற்றும் விருந்து அரங்கங்கள் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைபிடித்தல் குறித்து :**

மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (முதன்மை அமர்வு O.A.எண்.400/2017 –ல் 23.07.2020 அன்று வழங்கிய உத்தரவின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப் பொது அறிவிப்பினை வெளியிடுகின்றது.

திருமண மண்டபங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள், நெடுஞ்சாலை உணவகங்கள் மற்றும் விருந்து அரங்கங்கள் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைபிடிப்பது குறித்து மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் O.A.எண்.400/2017 –ல் 23.07.2020 அன்று வழங்கிய உத்தரவில் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதன்படி திருமண மண்டபங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள், நெடுஞ்சாலை உணவகங்கள் மற்றும் விருந்து அரங்கங்கள் கடை பிடிக்க வேண்டிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதாவது நீர் பயன்பாட்டில் சிக்கனம், திட மற்றும் திரவ கழிவுகளை மேலாண்மை செய்தல், நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986, ஒலி மாசு (ஒழுங்கமைவு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 2000, வாகனங்கள் நிறுத்துவதற்கான போதுமான இடவசதி, டீசல் ஜெனரேட்டர்களின் சக்திக்கு தகுந்த உயரமான புகைபோக்கிகள் அமைத்தல் குறித்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இதனை உள்ளாட்சி அமைப்புகள், மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகள் கண்காணிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

விதிகளை மீறி செயல்படும் நிறுவனங்களின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும், அவற்றின் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கவும் மற்றும் வழக்கு தொடரவும் மற்றும் மாசு படுத்துபவரே அதனை சரி செய்யும் செலவினை ஏற்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகையினை வசூலிக்கவும் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. தூய்மையான சுற்றுச்சூழலில் வாழ்வது ஒவ்வொரு குடிமக்களின் அடிப்படை உரிமையாகும். இதனை நிலை நாட்ட, மேற்படி நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும் என மாண்புமிகு பசுமை தீர்ப்பாயம் குறிப்பிட்டுள்ளது. இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அரசு துறைகள் மற்றும் மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு காலாண்டுக்கு ஒரு முறை அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22343140, 22353141
Fax : 044 - 22353068
Email : tnpcb@md3.vsnl.net.in Web : www.tnpcb.gov.in

எனவே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருமண மண்டபங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள், நெடுஞ்சாலை உணவகங்கள் மற்றும் விருந்து அரங்கங்கள், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள வழிமுறைகளை கடை பிடிக்க வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அதன்படி, திருமண மண்டபங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள், நெடுஞ்சாலை உணவகங்கள் மற்றும் விருந்து அரங்கங்கள் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம்) 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம்) 1981 –ன் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் நிறுவுவதற்கான இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணையை பெற வேண்டும். தவறும் பட்சத்தில், அந்நிறுவனங்களின் இயக்கத்தை நிறுத்தி வைக்கவும், வழக்கு தொடரவும் மற்றும் சுற்றுச்சூழல் இழப்பீடு தொகையினை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இது தொடர்பான கூடுதல் தகவல்களை வாரிய இணைய தளம் www.tnpcb.gov.in –லும் மற்றும் அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களை தொடர்பு கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

2/5

**தலைவர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**